# "இலங்கைத் தமிழர்கள் நிலை நன்றாக இருக்கிறது"!




## -இலங்கைத் தமிழறிஞர் சிவத்தம்பி பேட்டி!

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பல்வேறு நாடுகளில் இருந்து தமிழறிஞர்கள் கோவை வந்தவண்ணம் உள்ளனர். அவர்களில் மிக முக்கியமானவர் இலங்கையைச் சேர்ந்த தமிழறிஞரும், தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியருமான கார்த்திகேசு சிவத்தம்பி. 'தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் நடக்க இருக்கிறது' என்ற அறிவிப்பு வந்தவுடனேயே பரபரப்புக்கு உள்ளானவர் இவர். 'உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுப் பணிகள் நடக்க ஆறு மாதங்களாவது கால நிர்ணயம் வேண்டும்' என்று தைரியமாக எடுத்துக் கூறியவரும் சிவத்தம்பிதான். தனது குடும்பத்துடன் கடந்த வாரமே கோவைக்கு வந்துவிட்ட சிவத்தம்பியை தமிழன் எக்ஸ்பிரஸுக்காக நாம் சந்தித்துப் பேசினோம்.

பா. பிரதீப்குமார்

❊ 'தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு வர மாட்டேன்' என நீங்கள் சொன்னதாக முன்பு செய்திகள் வந்ததே?

'எனது வயது மற்றும் சூழ்நிலை காரணமாக மாநாட்டுக்கு வருவதற்கு சாத்தியம் இல்லை' என்றுதான் என்னிடம் பேசிய பேராசிரியர் ஒருவரிடம் நான் முன்பு சொன்னேன். ஆனால் அது திரித்துக் கூறப்பட்டு 'மாநாட்டுக்கு நான் வரப்போவதில்லை' என்ற ரீதியில் ஒரு கருத்து மயக்கம் தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது. அந்தக் கருத்து மயக்கத்தை நான் இரண்டே நாட்களில் மாற்றிக்கொண்டு விட்டேன்.

❊ கருத்து மயக்கத்தோடே இருந்த நீங்கள் மாநாட்டு நிகழ்ச்சிக்கு பத்து நாட்கள் முன்னதாக வந்திருக்கிறீர்களே...!

முதலில் நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த மாநாடு தமிழ்ச் செம்மொழி மாநாடு. தமிழைப் பற்றிய மாநாடு. இதில் கலந்துகொள்வது என்பது உலகில் உள்ள அத்தனை தமிழருக்கும் பெருமை சேர்க்கும் விஷயம். ஆகவே இந்த மாநாட்டில் உலகம் முழுவதும் இருந்து வருகின்ற தமிழறிஞர்களோடு இணைந்து கலந்துரையாடுவதை நான் எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். இந்த மாநாட்டிற்கு என்னையும் அழைத்ததற்கு தமிழக முதல்வருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.